


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2023) சென்னை. கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி ”நிறுவனங்களின் நாயகர் கலைஞர் நிகழ்ச்சியில் நடைபெற்ற கருத்தரங்கை பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற ”நிறுவனங்களின் நாயகர் கலைஞர் நிகழ்ச்சியில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2023) சென்னையில் நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பாத்திமா முசாபர் அவர்களின் மகள் ஃபசிலா பாத்திமா – முயிஸ் அகமது ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, அப்துல் சமது, முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (25.11.2023) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் ”நிறுவனங்களின் நாயகர் கலைஞர் சிறப்பு புகைப்பட கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே. என். நேரு, முனைவர் க.பொன்முடி, எஸ். ரகுபதி, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், செஞ்சி. கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணைமேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பி.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உத்தரகாண்ட் : தொழில்நுட்பக் கோளாறு - சுரங்க மீட்புப் பணிகளில் தொய்வு!

### மாற்று வழிகளைக் கண்டறிய அதிகாரிகள் தீவிரம்!

டேராடூன், நவ. 26- தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உத்தரகாண்ட் சுரங்க மீட்பு பணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், மாற்று வழிகளைக் கண்டறியும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலம் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக சில்க்யாரா-பர்கோட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதையில் கடந்த 12ம் தேதி திடீர் மண்சரிவு ஏற்பட்டது.

இதில் 41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் பணிகள் பல்வேறு இடையூறுகளைத் தாண்டி கடந்த 12 நாட்களாக தீவிரமாக நடந்து வருகிறது.

தொழிலாளர்களை அடைய 15 மீட்டர் தூரம் உள்ள நிலையில், விரிசல் ஏற்பட்டதால் மீட்பு பணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டது. சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்களை மீட்க வெறும் 10 முதல் 12 மீட்டர்கள் மட்டுமே டிரில்லிங் செய்ய வேண்டியுள்ளதாகவும், எதிர்பாராத இடையூறுகளால் பணிகளில் தாமதம் ஏற்படுவதாகவும் தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், சுரங்க மீட்புப் பணிகளுக்கு மாற்று வழிகளைக் கண்டறிய அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.





